# கண் திறக்கப்பட்ட சமாரியன்

## 10, குஷ்டரோகிகள்



**ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள்!**

இலவசமாய்ப் பெற்றீர்கள், இலவசமாய்க் கொடுங்கள் மத் 10:8 ன் படி ஆண்டவர் என்னுடைய வாழ்க்கையில் கற்றுக்கொடுத்ததை மற்றவர்களும் கற்றுக்கொண்டு தங்களுடைய வாழ்க்கையை கிறிஸ்துவின் சாயலாக மாற்றுவதற்கு பாரத்தோடும் ஜெபத்தோடும் எழுதுகிறேன். உங்களுடைய ஜெபங்கள் என்னை தட்டி எழுப்பி பாரங்களை உள்ளத்தில் போட்டு தேவன் எழுத வைத்த கிருபைக்காக ஆண்டவருக்கு நன்றி செலுத்துகிறேன். இங்கே கண்திறக்கப்பட்ட குஷ்டரோகியான சமாரியன் என்ற பாத்திரத்தை குறித்து படிப்போம்.

தேவசமாதானம் உங்கள் இருதயங்களில் ஆளக்கடவது, இதற்கென்றே நீங் கள் ஒரே சரீரமாக அழைக்கப்பட்டீர்கள்; நன்றியறிதலுள்ளவர்களாயுமிருங்கள். கொலே3:15

என்ற வசனத்தின்படி எல்லாருடைய உள்ளத்திலும் எந்த சூழ்நிலையிலும் தேவ சமாதானம் ஆள வேண்டும். அதற்காகவே தேவன் நம்மை அழைத்திருக்கிறார்.

நீங்கள் அடுப்பினடியில் கிடந்தவர்களாயிருந்தாலும், வெள்ளியால் அலங்கரிக்கப்பட்ட புறாச்சிறகுகள்போலவும், பசும்பொன் நிறமாகிய அதின் இறகுகளின் சாயலாகவும் இருப்பீர்கள். சங் 68:13

என்ற வசனத்தின் படி மாற்றப்பட்ட நாம், தேவன் செய்த அற்புதங் களுக்காக நன்றி உள்ளவர்களாக இருப்போம்.

**லூக்17:11-19**

11. பின்பு அவர் எருசலேமுக்குப் பிரயாணம்பண்ணுகையில், அவர் சமாரியா கலிலேயா என்னும் நாடுகளின் வழியாக நடந்துபோனார்.

12. அவர் ஒரு கிராமத்தில் பிரவேசித்தபோது, குஷ்டரோகமுள்ள மனுஷர் பத்துப்பேர் அவருக்கு எதிராக வந்து, தூரத்திலே நின்று:

13. இயேசு ஐயரே, எங்களுக்கு இரங்கும் என்று சத்தமிட்டார்கள்.

14. அவர்களை அவர் பார்த்து: நீங்கள் போய், ஆசாரியர்களுக்கு உங்களைக் காண்பியுங்கள் என்றார். அந்தப்படி அவர்கள் போகையில் சுத்தமானார்கள்.

15. அவர்களில் ஒருவன் தான் ஆரோக்கியமானதைக் கண்டு, திரும்பிவந்து, உரத்த சத்தத்தோடே தேவனை மகிமைப்படுத்தி,

16. அவருடைய பாதத்தருகே முகங்குப்புற விழுந்து, அவருக்கு ஸ்தோத்திரஞ்செலுத்தினான்; அவன் சமாரியனாயிருந்தான்.

17. அப்பொழுது இயேசு: சுத்தமானவர்கள் பத்துப்பேர் அல்லவா, மற்ற ஒன்பதுபேர் எங்கே?

18. தேவனை மகிமைப்படுத்துகிறதற்கு, இந்த அந்நியனே ஒழிய மற்றொருவனும் திரும்பிவரக்காணோமே என்று சொல்லி,

19. அவனை நோக்கி: நீ எழுந்துபோ, உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது என்றார்.

## குஷ்டரோகிகளின் பின் சூழல்

அந்தக் காலக்கட்டங்களில் அவர்களின் பின் சூழ்நிலைகள் என்ன என்று அறிந்திருந்தோமானால் நமக்கு இலகுவாக இருக்கும். ஆதி காலங்களில் குஷ்டரோகம் உள்ளவர்கள் (லேவி 13:45,46) ஊருக்குள் வரவோ, தேவாலயத்திற்குள் நுழையவோ, நல்ல மற்றும் கெட்ட காரியங்களுக்கு ஊருக்குள் வந்து ஜனங்களோடு ஐக்கியப்படாதபடிக்கு பாளையத்துக்கு வெளியே இருக்க வேண்டும் என்பது நிபந்தனை. இந்த வியாதியுள்ளவர்கள் சேர்ந்து குழுக்களாக இருப்பது வழக்கம்.

அவர்கள் ஊருக்கு அருகில் வரும் பொழுது துண்டு துணியை தாடியோடு போட்டு தீட்டு, தீட்டு என்று சத்தமிட வேண்டும். அப்பொழுது ஜனங்கள் கேட்டு இவர்களை விட்டு ஒதுங்கி போவார்கள். இவர்கள் நம்முடைய ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து செய்யும் அற்புதங்களையும் அதிசயங்களையும் குறித்து கேள்விப்பட்டிருக்கக்கூடும். ஆகவே அவர் வருகிறார் என்று கேள்விப்பட்டு அவரிடத்தில் சென்று குஷ்டரோகம் உள்ள 10 பேர் தூரத்திலே நின்று ஐயரே எங்களுக்கு இரங்கும் என்று விண்ணப்பம் பண்ணினார்கள்.

பாருங்கள், ஜீவனோடு இருந்தும், நல்ல கெட்ட காரியங்களில் பங்கு கொள்ள முடியாமல் குற்ற உணர்வால் தாக்கப்பட்டு இருக்கிறீர்களா? அல்லது வீட்டாராலும் ஊராராலும் புறக்கணிக்கப்பட்டு தனியாக தவிக்கிறீர்களா? ஒரு வேளை ஆவிக்குரிய வாழ்க்கைதான் நானும் வாழ்ந்து கொண்டிருக்கிறேன். ஆனாலும் பாலைவனத்திற்குள்ளாக நடக்கிறேன் என்று உணர்கிறீர்களா? ஒருவரும் அறியாத ஏதோ சில பகுதிகளில் அற்புதத்தை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறீர்களா? வெளியில் வர முடியாத குழியில் மாட்டி சிக்கி ஆவிக்குரிய நண்பர்களை பார்க்க முடியாமல் இருக்கிறீர்களா?

நிச்சயமாக தேவன் உங்களை விடுவிப்பார். அதற்காகவே அவர் உங்களை தேடுகிறார். நீங்கள் ஜீவனோடு இருந்தும் சிறைச்சாலையில் இருக்கிற அனுபவத்திற்குள் இருக்கிறீர்களா? இயேசு நிச்சயம் உங்கள் சிறையிருப்பை மாற்றுவார். (சங் 14:7)

## பதிலை கொண்டுவரும் ஜெபம்

குஷ்டரோகம் இருந்தபடியினால் ஆண்டவரிடம் கிட்ட வர முடியாமல் தூரமாக நின்று ஐயரே எங்களுக்கு இரங்கும் என்று விண்ணப்பித்தனர். ஏன் இப்படி ஜெபித்தார்கள் தெரியுமா?

ஏற்கனவே ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவைக் குறித்து அறிந்து அவரால் எங்களுக்கு அற்புதத்தை செய்ய முடியும் என்ற விசுவாசம் அவர்களை ஜெபிக்கத் தூண்டியது. நாம் விசுவாசிக்கிறவர் இன்னார் என்பதை நாம் அறிந்திருந்தால் அவரிடம் நிச்சயமாக கேட்டு நாம் அற்புத தெய்வீக சுகத்தை பெற்றுக் கொள்ள முடியும்.

## கண்மூடிவிசுவாசம் (Blind faith)

மேலும் காணப்படுகிறவைகளையல்ல, காணப்படாதவைகளை நோக்கியிருக்கிற நமக்கு, அதிசீக்கிரத்தில் நீங்கும் இலேசான நம்முடைய உபத்திரவம் மிகவும் அதிகமான நித்திய கனமகிமையை உண்டாக்குகிறது. 2 கொரி 4:17

நாங்கள் ஆராதிக்கும் தேவன் எங்களை தப்புவிப்பார் என்ற விசுவாசம் தானியேல் நண்பர்களுக்கு உண்டாயிருந்தது. அதைப்போல ஆண்டவர் ஆசாரியர்களிடத்தில் போய் காண்பி என்று சொன்னதை அல்லது காணப்படாததை நம்பி சென்ற அவர்களின் விசுவாசம் பெரிது.

அருமையானவர்களே, எந்த கேள்வியும் கேட்காமல் சென்றார்கள். இதுதான் கண்மூடி விசுவாசம். விசுவாசம் மலைகளை பெயர்க்கும். விசுவாசித்து போகையில் அவர்கள் சுத்தமானார்கள்.

## கண் திறக்கப்பட்ட சமாரியன்

10 பேரும் போகிற வழியில் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து சொன்னது போல குஷ்டரோகத்திலிருந்து சுத்தமானார்கள். 9 பேரும் தேவாலயத்தில் ஆசாரியனிடத்தில் தங்களை காட்டும் படி சென்றுவிட்டனர். ஆண்டவரும் அதைத்தானே சொன்னார்? இல்லையா. பிறகு ஏன் நாம் அவர்களை நன்றியில்லாதவர்கள் என்று சொல்லுகிறோம்?.

சமாரியனோ இவ்வளவு மகத்தான அற்புதத்தை செய்தவர் தான் பிரதான ஆசாரியர் என்பதை உணர்ந்து கொள்ளும்படியாக அவனுடைய ஆவிக்குரிய கண்கள் திறக்கப்பட்டது. அவரிடத்தில் காட்டி நன்றி செலுத்தும் படியாக முதலில் அவரை தேடி வந்தான்.

மற்றவர்களிடத்திலிருந்தும் தேவன் இதைதான் எதிர்பார்த்தார். ஆகவேதான் சுகமானவர்கள் 10 பேர் அல்லவா, மீதம் உள்ள 9 பேர் எங்கே? என்றார்.

பரிசுத்தரும், குற்றமற்றவரும், மாசில்லாதவரும், பாவிகளுக்கு விலகினவரும், வானங்களிலும் உயர்ந்தவருமாயிருக்கிற இவ்விதமான பிரதான ஆசாரியரே நமக்கு ஏற்றவராயிருக்கிறார். எபி-7:26

அருமையானவர்களே! நம்முடைய ஆவிக்குரிய கண்கள் திறக்கப்பட வேண்டும். அன்று ஆகார் தன்னுடைய பிள்ளைக்கு தண்ணீர் இல்லாமல் கலங்கி, தன்னுடைய மகன் சாவதை பார்க்கக்கூடாது என்று சொல்லி தூரமாக நின்ற பொழுது தேவன் அவளோடு பேசின பிற்பாடு

தேவன் அவளுடைய கண்களைத் திறந்தார். அப்பொழுது அவள் ஒரு தண்ணீர்த் துரவைக் கண்டு, போய், துருத்தியிலே தண்ணீர் நிரப்பி, பிள்ளைக்குக் குடிக்கக் கொடுத்தாள். ஆதி 21:19

ஆவிக்குரிய கண்கள் திறக்கப்பட்டால்தான் நமக்கு அருகிலிருக்கிற ஆசீர்வாதங்களை நாம் அறிந்து அதைப் பெற்றுக்கொள்ள முடியும். சரிதானே!

## விடுதலையின் கெம்பீர சத்தம்

விடுதலைப் பெற்ற குஷ்டரோகி மகத்துவமான பிரதான ஆசாரியரை தேடி வந்தான். அந்த சமாரியன் தூரத்தில் அவரை கண்ட போது உரத்த சத்தத்தோடே தேவனை மகிமைப்படுத்தினான்.

சபையில் ஜனங்கள் ஏன் சத்தத்தோடு தேவனை ஆராதிக்க வேண்டும்? அமைதலாகவே ஆராதிக்கலாமே என்ற எண்ணம் என் உள்ளத்தில் அநேக நாட்களாக இருந்தது. இதை படித்த பொழுதுதான், உண்மையில் இந்த மனுஷன் எவ்வளவு பயங்கரமான பிரச்சனையிலிருந்து விடுதலை பெற்றவன். அந்த சந்தோஷத்தை அடக்கி வைக்க அவனால் முடியுமா என்ன? நிச்சயம் முடியாது. அந்த சந்தோஷம் அவனை உற்சாகத்திற்குள் தள்ளியது. அவனால் சும்மாயிருக்க முடியவில்லை. தேவனை உரத்த சத்தத்தோடே மகிமைபடுத்தினான். அவருடைய பாதத்தில் விழுந்து அவரை தொழுது கொண்டான். இதிலிருந்து நான் ஒன்றைக் கற்றுக்கொண்டேன்.

பயங்கரமான குழியிலும் உளையான சேற்றிலுமிருந்து என்னைத் தூக்கியெடுத்து, என் கால்களைக் கன்மலையின்மேல் நிறுத்தி, என் அடிகளை உறுதிப்படுத்தி, நமது தேவனைத் துதிக்கும் புதுப் பாட்டை அவர் என் வாயிலே கொடுத்தார் சங் 40:2-3

எனக்கு அற்புதம் செய்த தேவாதி தேவனை என் வாய்களை திறந்து நன்றி சொல்லாமல் இருக்க முடியாது. மற்றவர்கள் என்னை எப்படியும் சொல்லிட்டு போகட்டும். தாவீது தேவனை ஆடி பாடி துதித்தானே, எதையாவது குறித்து கவலைப்பட்டானா? இல்லை.

ஆம் அருமையானவர்களே, அவன் தேவனுடைய பாதத்தில் விழுந்து தொழுது கொண்டதிலே ஜீவனுள்ள அர்த்தம் இருந்தது. நம்முடைய ஆராதனை எப்படி காணப்படுகிறது? சும்மா உதட்டு அளவில் ஸ்தோத்திரம், ஸ்தோத்திரம் அல்லது நன்றி, நன்றி என்று சொல்லுகிறோமா? இல்லை உள்ளத்தின் ஆழத்திலிருந்து உணர்ந்தவர்களாய் நன்றி சொல்லி மகிழ்கிறோமா? சற்றே சிந்தியுங்கள்.

## ஆத்ம இரட்சிப்பு

10 பேருக்கும் தேவன் அவர்களுடைய சரீரத்திலே அற்புத சுகம் கொடுத்தார். அது நல்லதே. ஆனாலும் இந்த சமாரியனுக்கு மாத்திரம் தான் ஆத்ம இரட்சிப்பை கொடுத்தார்.

இயேசு அவனை நோக்கி: நீ எழுந்துபோ, உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது என்றார்.

நம்மில் அநேகர் பெரிய பெரிய அற்புதங்களை தேவனிடத்திலிருந்து பெற்றிருக்கிறோம். அப்படியிருந்தாலும் அது நம்மை பரலோகத்திற்கு கொண்டு செல்லாது. ஆனால் ஆத்ம இரட்சிப்பு தான் நம்மை பரலோக வாழ்க்கைக்கு கொண்டு செல்லும்.

யூதனென்றும் கிரேக்கனென்றும் வித்தியாசமே இல்லை; எல்லாருக்குங் கர்த்தரானவர் தம்மைத் தொழுதுகொள்ளுகிற யாவருக்கும் ஐசுவரியசம்பன்னராயிருக்கிறார்.

ரோம 10:12

தேவன் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக! ஆமென்